## மானாம்பதியில் ரோட்டரி கிளப் மூலம் ரூ.7.5 கோடி மதிப்பில் இருளர் பழங்குடியினருக்கு கான்கிரீட் வீடுகள்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



திருப்போரூர் ஒன்றியத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியினருக்கு மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் குயில்குப்பம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை அமைச்சர் உதயநிதி திறந்து வைத்தார்.

**திருப்போரூர்**: திருப்போரூர் அருகே மானாம்பதியில் ரோட்டரி கிளப் மூலம் ரூ.7.5 கோடி மதிப்பில் இருளர் பழங்குடியினருக்கு கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகளை அமைச்சர் உதயநிதி நேற்று திறந்து வைத்தார்.

திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய மானாம்பதி ஊராட்சியில் குயில் குப்பம் பகுதி உள்ளது. இங்கு குடிசை வீடுகளில் வசித்த இருளர் பழங்குடியினர் 63 பேருக்கு ரூ. 7.5 கோடி மதிப்பில் மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு வீட்டுக்கும் 1 பிரிட்ஜ், டி.வி., பீரோ, குக்கர், மிக்சி, கிரைண்டர், காஸ் அடுப்பு, சமையல் பாத்திரங்கள், மின் விசிறி போன்றவையும் வழங்கப்படுகின்றன. அபிராமி திரையரங்க உரிமையாளரும், மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்க தலைவருமான அபிராமி ராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி

EVA STALIN IAS ACADEMY

ஸ்டாலின் பங்கேற்று புதிய வீடுகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர. ராகுல்நாத், ரோட்டரி கிளப் முன்னாள் இயக்குநர் வெங்கடேஷ், காஞ்சிபுரம் எம்.பி. செல்வம், திருப்போரூர் எம்எல்ஏ எஸ்.எஸ். பாலாஜி, ரோட்டரி கிளப் தலைவர் பிரகாஷ் வைத்தியநாதன், செயலாளர் விஜய் தூயமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி திருப்போரூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருப்போரூர், இள்ளலூர், காயார், வெண்பேடு உள்ளிட்ட இடங்களில் தி.மு.க. கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் உதயநிதி கலந்து கொண்டு கொடியேற்றி வைத்தார்.

**சேதமான பயிர் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீடு: என்எல்சி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு**



**சென்னை:** என்எல்சி பணியின்போது சேதமான நெற்பயிர்களுக்கு, ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வீதம் கணக்கிட்டு விவசாயிகளுக்கு ஆக.6-ம் தேதிக்குள் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்று என்எல்சி நிர்வாகத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விவசாயிகள் செப்.15-

க்குள் அறுவடை பணிகளை முடித்து, அந்த நிலங்களை என்எல்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

நெய்வேலி என்எல்சி நிறுவனத்தில் 2-ம் கட்ட சுரங்க விரிவாக்கபணிகளுக்காக கரிவெட்டி, மேல்வளையமாதேவி, கீழ்வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உள்ள விளைநிலங்கள் கடந்த 2007-ம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டன. மழை காலத்தில் என்எல்சி சுரங்கம்மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் ஏற்படும் வெள்ள சேதத்தை தடுக்கும் நோக்கில், பரவனாறு ஆற்றை ஆழப்படுத்தி, இந்த நிலங்களின் வழியே மாற்று வழித்தடத்தில் கால்வாய் அமைக்கும் பணி தற்போது நடந்து வருகிறது.

இந்த பணியின்போது, ஏற்கெனவே கையகப்படுத்திய நிலங்களில் கால்வாய் தோண்டும் பணியில் ஈடுபட்ட பொக்லைன் இயந்திரங்களால், நன்கு விளைந்த நெற்பயிர்கள் நாசமாகின. இதற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். பாமக தரப்பிலும் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில், ஏற்கெனவே கையகப்படுத்திய நிலத்தை, குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு மேலாகஎன்எல்சி நிர்வாகம் பயன்படுத்தாததால், அந்த நிலத்தை தன்னிடமே திருப்பி ஒப்படைக்க கோரி, பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் விசாரித்தார். சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து என்எல்சி மற்றும் தமிழக அரசும், செப்.15-ம் தேதிக்குள் அறுவடை பணிகளை முடித்து நிலத்தை ஒப்படைப்போம் என விவசாயிகள் தரப்பும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, நீதிபதி சுப்பிரமணியம் முன்பு இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நடந்த வாதம்:

**என்எல்சி தரப்பில் மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏஆர்எல் சுந்தரேசன்:** சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்க என்எல்சி முடிவு செய்துள்ளது. இத்தொகை

காசோலையாக கடலூர் சிறப்பு வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்படும். அவரிடம் இருந்து விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

**மனுதாரர் தரப்பில் பாமக வழக்கறிஞர் கே.பாலு:** அறுவடை நேரத்தில் பயிர்களை பொக்லைன் இயந்திரம் மூலம் அழித்துள்ளனர். எனவே, ஏக்கருக்கு ரூ.80 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். நிலத்துக்கு உரிய இழப்பீட்டு தொகை பலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இவ்வாறு வாதம் நடந்தது.

இதையடுத்து, நீதிபதி பிறப்பித்த இடைக்கால உத்தரவில், “பாதிக்கப்பட்ட நிலத்தின் உரிமையாளர், ஏக்கருக்கு ரூ.80 ஆயிரம் இழப்பீடு கோருகிறார். என்எல்சி ரூ.30 ஆயிரம் தருவதாக கூறியுள்ளது.

எனவே, ஏக்கருக்கு ரூ.40 ஆயிரத்தை இழப்பீடாக கணக்கிட்டு, ஆக.6-ம் தேதிக்குள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அதேபோல, விவசாயிகளும் செப்.15-ம் தேதிக்குள் அறுவடை பணிகளை முடித்து, நிலங்களை என்எல்சி வசம் ஒப்படைக்க வேண்டும். என்எல்சி அதன்பிறகு காவ்வாய் பணிகளை தொடர எந்த தடையும் இல்லை” என்று உத்தரவிட்டுள்ளார்.

**“பெண்கள் முன்னேறினால் உலகமும் முன்னேறும்” - ஜி20 அமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி உரை**



**புதுடெல்லி:** மகளிருக்கு அதிகாரமளித்தல் தொடர்பான ஜி20 அமைச்சர்கள் மாநாட்டில் காணொலி மூலமாக உரையாற்றிய பிரதமர் மோடி, பெண்கள் முன்னேறினால் உலகமும் முன்னேறும் என்று தெரிவித்தார்.

பிரதமர் மோடி ஆற்றிய உரை: "மகாத்மா காந்தியின் பெயரில் அமைந்துள்ள நகரமான காந்திநகர் உருவான நாளில் உங்கள் அனைவரையும் இங்கு வரவேற்கிறேன். அகமதாபாத்தில் உள்ள காந்தி ஆசிரமத்தைப் பார்வையிட உங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்று, முழு உலகமும் பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றில் நிலையான தீர்வுகளைக் கண்டுபிடிப்பது பற்றி பேசுகிறது. காந்தி ஆசிரமத்தில், காந்திஜியின் வாழ்க்கை முறையின் எளிமைத்தன்மை, நிலைத்தன்மை, தற்சார்பு மற்றும் சமத்துவம் போன்றவை குறித்த அவரது தொலைநோக்கு சிந்தனைகளை நீங்கள் நேரடியாகக் காண்பீர்கள். நீங்கள் அதை உத்வேகமாகக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தண்டி குதீர் அருங்காட்சியகத்திலும் நீங்கள் அதை அனுபவிக்க முடியும், இந்த வாய்ப்பை நீங்கள் தவறவிடக்கூடாது. காந்தியடிகளின் புகழ்பெற்ற சர்க்கா நூற்புச் சக்கரம் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் கங்காபென் என்ற பெண்ணால் கண்டுபிடிக்கப்பட்டது என்பதை நான் இங்கு குறிப்பிடத் தேவையில்லை. அன்றிலிருந்து காந்தியடிகள் எப்போதும் கதர் ஆடையை அணிந்திருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். இது தற்சார்பு மற்றும் நிலைத்தன்மையின் அடையாளமாக மாறியது.

பெண்கள் முன்னேறினால் உலகமும் முன்னேறும்; பெண்கள் வளர்ச்சியடையும் போது உலகம் செழிக்கும். பெண்களின் பொருளாதார மேம்பாடு வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது. அவர்களுக்கு கல்வி கிடைப்பது உலகளாவிய முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது. அவர்களின் தலைமைத்துவம் ஒருங்கிணைப்பை வளர்க்கிறது. மேலும், அவர்களின் குரல்கள் நேர்மறையான மாற்றத்தைத் தூண்டுகின்றன. பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான மிகவும் பயனுள்ள வழி, பெண்கள் தலைமையிலான வளர்ச்சி அணுகுமுறையாகும். இந்த திசையில் இந்தியா தற்போது முன்னேறி வருகிறது.

இந்திய குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒரு உத்வேகமூட்டும் முன்னுதாரணமாக திகழ்கிறார். அவர் ஒரு எளிய பழங்குடி பின்னணியில் இருந்து வந்தவர். ஆனால் இப்போது உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டை

வழிநடத்தி, உலகின் இரண்டாவது பெரிய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியாக பணியாற்றுகிறார். இந்த ஜனநாயகத்தின் தாயகத்தில், 'வாக்களிக்கும் உரிமை' பெண்கள் உள்பட அனைத்து குடிமக்களுக்கும் இந்திய அரசியலமைப்பால் ஆரம்பத்திலிருந்தே சமமாக வழங்கப்பட்டது. தேர்தலில் போட்டியிடும் உரிமையும் சமமான அடிப்படையில் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மாற்றத்தின் முக்கிய முகவர்களாக உள்ளனர்.

இந்தியாவில் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 46சதவீதம் பேர் பெண்கள். சுய உதவிக் குழுக்களாக பெண்களை அணிதிரட்டுவதும் மாற்றத்திற்கான சக்தியாக இருந்து வருகிறது. கொவிட் தொற்றுநோய் பாதிப்பின் போது, இந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பிரதிநிதிகள் சமூக ஆதரவுக்கான தூண்களாக உருவெடுத்தனர். முகக்கவசம் தயாரிப்பு, சானிடைசர் தயாரிப்பு, நோய்த்தொற்று தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றில் அவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இந்தியாவில் உள்ள செவிலியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள். கொவிட் தொற்றின் போது அவர்கள் பாதுகாப்பு கவசமாக இருந்தனர். மேலும், அவர்களின் சாதனைகள் குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

இந்தியாவில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி எங்களுக்கு முக்கிய முன்னுரிமையாக உள்ளது. பிரதமரின் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் 70 சதவீத கடன்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதேபோல், ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் 80 சதவீத பயனாளிகள் பெண்கள் ஆவர். பிரதமரின் உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ், கிராமப்புற பெண்களுக்கு கிட்டத்தட்ட 100 மில்லியன் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சுத்தமான சமையல் எரிபொருளை வழங்குவது சுற்றுச்சூழலில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில்நுட்பக் கல்வியில் பெண்களின் எண்ணிக்கை 2014 முதல் இரு மடங்காக உயர்ந்துள்ளது.

மேலும், இந்தியாவில் ஸ்டெம் எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் பாடப்பிரிவு பட்டதாரிகளில் கிட்டத்தட்ட 43%

பேர் பெண்கள். இந்தியாவில் உள்ள விண்வெளி விஞ்ஞானிகளில் நான்கில் ஒரு பங்கினர் பெண்கள். சந்திரயான், ககன்யான், மிஷன் மார்ஸ் போன்ற நமது முன்னோடித் திட்டங்களின் வெற்றிக்குப் பின்னால் பெண் விஞ்ஞானிகளின் திறமையும் கடின உழைப்பும் உள்ளது. இன்று இந்தியாவில் ஆண்களை விட பெண்களே உயர்கல்வியில் அதிகம் சேருகின்றனர். சிவில் விமானப் போக்குவரத்தில் அதிக சதவீத பெண் விமானிகளைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மேலும், இந்திய விமானப்படையில் பெண் விமானிகள் தற்போது போர் விமானங்களை இயக்கி வருகின்றனர். நமது அனைத்து ஆயுதப்படைகளிலும் பெண் அதிகாரிகள் பணியமர்த்தப்படுகிறார்கள்.

இந்தியாவிலும், உலகளாவிய தென்பகுதி நாடுகளிலும், கிராமப்புற விவசாயக் குடும்பங்களின் முதுகெலும்பாகவும், சிறு வணிகர்கள் மற்றும் கடை உரிமையாளர்களாகவும் பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். இயற்கையுடனான நெருங்கிய தொடர்பைக் கருத்தில் கொண்டு, பருவநிலை மாற்றத்திற்கான புதுமையான தீர்வுகளுக்கான திறவுகோலை பெண்கள் கொண்டுள்ளனர். 18 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முதல் முக்கிய பருவ நிலை நடவடிக்கைக்கு பெண்கள் எவ்வாறு தலைமை தாங்கினர் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ராஜஸ்தானின் பிஷ்னோய் சமூகத்தினர், 'சிப்கோ' இயக்கத்தை துவக்கினர். கட்டுப்பாடற்ற முறையில் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க மரங்களைக் கட்டிப்பிடிக்கும் இயக்கம் அது. இந்த இயக்கத்தில் பெண்கள் அதிக பங்களிப்பை வழங்கினர். இதேபோல், சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை இயக்கமான லைஃப் இயக்கத்தின் தூதர்களாகவும் இந்திய பெண்கள் உள்ளனர். இந்த இயக்கத்தில் பாரம்பரிய ஞானத்தின் அடிப்படையில் சூழல் மாசுபாடு குறைக்கப்பட்டு, பொருட்கள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. பல்வேறு முயற்சிகளின் கீழ், சூரிய சக்தி பேனல்கள் மற்றும் விளக்குகள் தயாரிப்பதில் பெண்களுக்கு தீவிரமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

உலகப் பொருளாதாரத்தில் பெண் தொழில்முனைவோர் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இந்தியாவில் பெண் தொழில்முனைவோரின் பங்கு புதிதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பு, 1959 ஆம் ஆண்டில், மும்பையில் ஏழு குஜராத்தி பெண்கள் ஒன்றிணைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கினர். ஸ்ரீ மகிளா கிரிஹ்



EVA STALIN IAS ACADEMY

உத்யோக் என்ற இயக்கம் அது. அப்போதிலிருந்து, பல லட்சக்கணக்கான பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையை அது மாற்றியுள்ளது. அவர்களின் மிகவும் பிரபலமான தயாரிப்பான லிஜ்ஜத் அப்பளம், குஜராத் உணவு வகைகளில் பிரபலமானது!

கூட்டுறவு இயக்கத்தின் மற்றொரு வெற்றிக் கதை பால்வளத் துறை. இதுவும் பெண்களால் செயல்படுத்தப்படுகிறது. குஜராத் மாநிலத்தில் மட்டும் 3.6 மில்லியன் பெண்கள் பால்பண்ணை தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்தியா முழுவதும் இதுபோன்ற பல உத்வேகமூட்டும் நிகழ்வுகள் உள்ளன. இந்தியாவில், 15 சதவீத யுனிகார்ன் ஸ்டார்ட் அப் நிறுவனங்களில், குறைந்தபட்சம் ஒரு பெண் நிறுவனர் உள்ளனர். பெண்கள் தலைமையிலான இந்த யூனிகார்ன்களின் மொத்த மதிப்பு 40 பில்லியன் டாலருக்கும் அதிகமாகும். இருப்பினும், சாதனையாளர்களாக பெண்கள் மாறுவதற்கு நிலையான தளத்தை உருவாக்குவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். சந்தைகள், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகள் மற்றும் குறைந்த செலவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தடைகளை அகற்ற நாம் பணியாற்ற வேண்டும். அதே நேரத்தில், பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளின் சுமை சரியான அமைவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

பெண் தொழில்முனைவு, தலைமைத்துவம் மற்றும் கல்வியில் உங்கள் கவனம் பாராட்டத்தக்கது. பெண்களுக்கான டிஜிட்டல் மற்றும் நிதி கல்வியறிவை மேம்படுத்துவதற்காக நீங்கள் 'டெக்-ஈக்விட்டி பிளாட்ஃபார்ம்' என்ற தளத்தைத் தொடங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ், 'பெண்களுக்கு அதிகாரமளித்தல்' குறித்த ஒரு புதிய பணிக்குழுவை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், காந்திநகரில் மேற்கொள்ளப்படும் அயராத முயற்சிகள் உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு மகத்தான நம்பிக்கையை அளிக்கும். இக்கூட்டம் ஆக்கபூர்வமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற வாழ்த்துகிறேன்" என்று பிரதமர் நரேந்திர மோடி தனது உரையில் கூறினார்.

## ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி சென்னையில் இன்று தொடக்கம்: இந்திய அணி சீனாவுடன் பலப்பரீட்சை



பயிற்சியில் ஈடுபட்ட இந்திய அணி வீரர்கள்.

**சென்னை:** ஆடவருக்கான 7-வது ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடர் சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தல் இன்று (3-ம் தேதி) தொடங்குகிறது. நடப்பு சாம்பியன் கொரியா, இந்தியா, பாகிஸ்தான், சீனா, மலேசியா, ஜப்பான் ஆகிய 6 அணிகள் இந்தத் தொடரில் கலந்துகொள்கின்றன.

கோப்பையை வெல்லக்கூடிய அணிகளுள் ஒன்றாக கருதப்படும் 3 முறை சாம்பியனான இந்திய அணிக்கு உள்நாட்டில் நடைபெறும் இந்தத் தொடர் வரும் செப்டம்பர் இறுதியில் சீனாவில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டு போட்டிக்கான சிறந்த பயிற்சியாக இருக்கும் என கருதப்படுகிறது. 2011-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடரை முதன்முறையாக இந்தியா நடத்துகிறது.

உலகத் தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் இன்று இரவு 8.30 மணிக்கு சீனாவுடன் மோதுகிறது. முன்னதாக பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான கொரியா, ஜப்பானுடன் மோதுகிறது. தொடர்ந்து 6.15 மணிக்கு நடைபெறும் 2-வது ஆட்டத்தில் மலேசியா, பாகிஸ்தானை சந்திக்கிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னதாக அணியில் உள்ள வீரர்களின் திறனை சோதிப்பதற்கும், மற்ற ஆசிய அணிகளின் பலம், பலவீனங்களை அறிவதற்கும் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடர் இந்திய அணிக்கு பெரிய அளவில் உதவியாக இருக்கக்கூடும். ஏனெனில் ஆசிய விளையாட்டு போட்டியானது அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாரீஸ் ஒலிம்பிக்கில் கலந்துகொள்வதற்கான நேரடி வாய்ப்பை வழங்குகிறது.

ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி தங்களது ஆட்ட யுத்திகளை சோதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆசிய விளையாட்டுக்கு முன்னதாக தங்கள்வீரர்களை புத்துணர்ச்சியுடனும், காயங்களிலிருந்து பாதுகாத்து சமநிலைப்படுத்தும் செயலையும் இந்திய அணி மேற்கொள்ளக்கூடும்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணி இந்த ஆண்டில் தரவரிசையில் முன்னேற்றம் கண்டது. மற்றும் உலக அரங்கிலும் மதிப்பை பெற்றது. ஆனால் ஒடிசாவில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியால் 9-வது இடத்தை மட்டுமே பிடிக்க முடிந்தது. உலகக் கோப்பை தொடருக்கு பின்னர் ஹர்மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி 16 ஆட்டங்களில் விளையாடி உள்ளது. இதில் 9 ஆட்டங்களில் வெற்றி கண்டது. 5 ஆட்டங்களில் தோல்வியை சந்தித்தது. 2 ஆட்டங்களை டிரா செய்தது.

ஸ்பெயினில் நடைபெற்ற 4 நாடுகள் ஹாக்கி தொடரில் பங்கேற்ற இந்திய அணி அடுத்த 3 நாட்களில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் களமிறங்குகிறது.

**16 வருடங்களுக்குப் பிறகு:** சர்வதேச ஹாக்கி போட்டி சென்னையில் 16 வருடங்களுக்குப் பிறகு தற்போதுதான் நடைபெறுகிறது. கடைசியாக 2007-ம் ஆண்டு மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் ஆசிய கோப்பை ஹாக்கி

தொடர் நடைபெற்றது. இதில் இந்திய அணி இறுதிப் போட்டியில் 7-2 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவை வீழ்த்தி பட்டம் வென்றிருந்தது.

**இந்திய அணியின் பயணம்:** ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி 2011, 2016-ம் ஆண்டுகளில் சாம்பியன் பட்டம் வென்றது. 2018-ம் ஆண்டு தொடரின் பட்டத்தை பாகிஸ்தானுடன் கூட்டாக பகிர்ந்து கொண்டது. இவை தவிர 2012-ம் ஆண்டு தொடரில் வெள்ளிப் பதக்கமும், 2021-ம் ஆண்டு தொடரில் வெண்கலப் பதக்கமும் இந்திய அணி கைப்பற்றி இருந்தது. பாகிஸ்தான் அணி 2012, 2013-ம் ஆண்டுகளில் பட்டம் வென்றிருந்தது. 2021-ம் ஆண்டு தொடரில் ஜப்பானை வீழ்த்தி தென் கொரியா அணி சாம்பியன் ஆனது.

### இந்திய அணி விவரம்

- **கோல்கீப்பர்கள்:** பி.ஆர்.ஸ்ரீஜேஷ், கிருஷ்ணன் பஹதூர் பதக்.
- **டிபன்டர்ஸ்:** ஜர்மன்பிரீத் சிங், சுமித், ஜுக்ராஜ் சிங், ஹர்மன்பிரீத் சிங் (கேப்டன்), வருண் குமார், அமித் ரோஹிதாஸ்.
- **நடுகளம்:** ஹர்திக் சிங், விவேக் சாகர் பிரசாத், மன்பிரீத் சிங், நீலகண்ட சர்மா, ஷம்ஷேர் சிங்.
- **முன்களம்:** ஆகாஷ்தீப் சிங், மன்தீப் சிங், குர்ஜந்த் சிங், சுக்ஜீத் சிங், எஸ். கார்த்தி.

**‘தினமும் 100 மாணவர்கள்’:** ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடர் குறித்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறும்போது, “இந்திய ஹாக்கி அணியில் விளையாடிய பிரான்சிஸ் ரங்கநாதன் உட்பட அனைத்து முன்னாள் வீரர்களும் கவுரவிக்கப்படுவார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் ஒருவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள அரசு பள்ளி மாணவர்களை போட்டியை காண அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் தொகுதியில் குறைந்தது 100 குழந்தைகளை அழைத்து வருமாறு அறிவுறுத்தி உள்ளோம்.



EVA STALIN IAS ACADEMY

ஐபிஎல் ஃபேன் பார்க் போன்று தமிழகம் முழுவதும் 40 இடங்களில் போட்டிகளை காண ஏற்பாடு செய்யப்படும், அவற்றில் இலசவசமாக பொதுமக்கள் போட்டிகளை கண்டு களிக்கலாம். அடுத்த ஆண்டுகேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி நடைபெறஉள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**உலக பல்கலைக்கழக விளையாட்டு: மகளிர் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு தங்கப் பதக்கம்**



ஆஷி சவுக்சி, மனினி கவுஷிக் மற்றும் சிஃப்ட் கவுர் சாம்ரா

**செங்டு:** உலக பல்கலைக்கழக விளையாட்டு போட்டியில் மகளிருக்கான துப்பாக்கி சுடுதலில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

சீனாவின் செங்டு நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிருக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொஷிசன் பிரிவில் ஆஷி சவுக்சி, மனினி கவுஷிக் மற்றும் சிஃப்ட் கவுர் சாம்ரா ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது. இந்திய அணி இறுதிப் போட்டியில் 3,527 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்தது. சீன அணி 3,525 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், செக்குடியரசு அணி 3,499 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் பெற்றன.

ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் அர்ஜுன் சிங் சீமா, வருண் தோமர், அன்மோல் ஜெயின் ஆகியோரை உள்ளிடக்கிய இந்திய அணி 1,730 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் வென்றது. கொரியா அணி தங்கப் பதக்கமும், சீனா அணி வெள்ளிப் பதக்கமும் வென்றன.

ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் தனிநபர் பிரிவில் இந்தியாவின் வருண் தோமர் 7-வது இடம் பிடித்து ஏமாற்றம் அளித்தார்.

EVA STALIN IAS ACADEMY